கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

தை மாத இதழ்
NEWS BULLETIN
JANUARY 2023
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

தமிழர் திருநாள் தைப்பொங்கல்

தமிழ் மக்களுடைய பாரம்பரிய விழாக்களில் ஒன்றான தைப்பொங்கல் விழா, 14/01/2023 அன்று கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்ப் பாடசாலையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்விலே பெற்றோர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் இருந்து வருகை தந்த முதலைக்குழி முருகமூர்த்தி தேவஸ்தான பிரதம குருக்கள் சிவசிறி சுப்பிரமணிய குருக்கள், பிரசாத் ஐயா ஆகியோர் பூசைகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர். அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்.








நாள்	நிகழ்வு
	தமிழ்ப் பாடசாலை மற்றும் கலைப் பாடங்கள் நடைபெற்று வருகின்றன. பாடசாலையின் முகவரி: Clifford House, 38-44, Binley Road, Coventry CV3 1JA.
07/01/23	தமிழ்ப் பாடசாலை ஆரம்பம்
12/02/23	OFAAL விண்ணப்ப முடிவு நாள்
04/03/23	Griffin College International Examination in Cultural Subjects எமது பாடசாலையில் நடைபெறும். அன்று தமிழ்ப் பாடசாலை நடைபெறாது.
25/03/23	கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் ஆண்டு விழா
01/04/23	OFAAL Theory Exam – Coventry
21/05/23	OFAAL Practical Exam – Coventry

SATURDAY	TIME
Tamil	9.50am-12.30pm
Vocal	1pm-4pm
Keyboard/Violin	1pm-4pm
Karate	12.30pm-1.30pm

SUNDAY	TIME
Bharathanatiyam (Sathya Teacher)	10am-2pm
Bharathanatiyam (Ajantha Teacher)	1pm-4pm
Vocal	10am-2pm
Keyboard	10am-2pm
Violin/ Veena	10am-2pm
Miruthangam	1pm-4pm
Tamil	10am-12noon







கவிதை

வந்தது தைப்பொங்கல்

தமிழருக்கு தை மகிழ்வும்
தமிழர் தைத்திருநாளாம்
தைப்பொங்கல் விழாவாம்
இனிய பொங்கலோ பொங்கல்

பழையன கழிதலாம்
புதியன புகுதலாம்
பொங்கலுக்கு முன்னிலையே
போகிப் பண்டிகையாம்

விவசாயத்தால் விளைந்த பொருட்களைக்
கால் பொங்கிப் படைத்தும்
சூரியனை வணங்கி நன்றி கூறியும்
பொங்கலைக் கொண்டாடுகிறோம்.

மறுநாள் மாட்டுப் பொங்கலாம்
உழவுக்கு உதவிய மாடுகளை
அலங்கரித்துப் பொங்கல் செய்து
பொங்கல் பண்டிகை நிறைவேறுகிறதே

நன்றி.

செல்வி-சுபினா கோகிலநாதன்
தரம் 1 மாணவி

நூலக ஆரம்பம்*



தைப்பொங்கல் தினத்தன்று, எமது தமிழ்ப் பாடசாலையில், புதியதொரு முயற்சியாக பயன்மிக்க நூலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். அதற்காக, அரிய பல நூல்கள், பழம்பெரும் இதிகாசங்கள், நாவல்கள், கதைகள், போன்றவற்றை நேரடியாக இந்தியாவில் இருந்து வாங்கிவந்த கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் வலையமைப்பு இணைப்பாளர் திரு பிரபு சங்கர், தமிழாசிரியை திருமதி வித்தியாலஷ்மி பிரபு சங்கர், ஆகிய இருவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேநேரம், கொவன்றி நூலகத்தின் நடமாடும் சேவையும் சனிக்கிழமைகளில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே தயவுசெய்து நேரத்தை ஒதுக்கி, இந்நூல்களை வாசித்துப் பயன்பெறுங்கள்.

"வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும்"

புத்தகங்களை ஆர்வத்துடன் பெற்றுக்கொண்ட பெற்றோர்களைப் படத்தில் காணலாம்.



தமிழ்த்திறன் போட்டிகள்

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்ப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் 21/01/2023 அன்று நடாத்தப்பட்ட தமிழ்த் திறன் போட்டியில் பங்குபற்றிய, வெற்றியீட்டிய அனைத்து மாணவர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பாடசாலைக்கு கொவன்றி பாராளுமன்ற உறுப்பினர் விஜயம்



கொவன்றி வடக்கு மற்றும் மேற்குப் பகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினர் Taiwo Owatemi அவர்கள் 28/01/23 அன்று எமது தமிழ்ப் பாடசாலைக்கு வருகை தந்து, எல்லா வகுப்பறைகளையும் பார்வையிட்டு, ஆசிரியர்கள் மாணவர்கள், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்களுடனும் கலந்துரையாடினார்.

ஈழத்துப் புலமைகள் (பாகம் 10)

கடந்த இதழிலே, பண்டித ராசர். மகாகவி காளிதாசரின் இரகுவம்சத்தை, அதே கவிநயத்தில் சொற்சுவை, பொருட்சுவை தவறாமல் தமிழிலே தந்த புலவர் அரசகேசரி அவர்களது புலமையையும் பன்மொழி அறிவாற்றலையும் கண்டோம்.

இந்த இதழிலே, ஈழநாட்டின் கீழ்க்கரையில் அமைந்துள்ளதும் மாமன்னன் இராவணனது தாயார் மண்டோதரி அம்பாள் வாழ்ந்ததாகக் கருதப்படுவதுமான புனித நகராம் திரிகோணமலைப் பக்கம் திரும்பலாம் என நினைக்கிறேன். அங்கு பல இலக்கிய நூல்கள் பாடப்பட்டுள்ளதை அறியக்கூடியதாக இருந்தது. தம்பலகாமம் சிவன் கோவில் பற்றிய நூல்களும், கல்வெட்டுகளும், கன்னியா புனித வெந்நீரூற்றும் அதனுடன் தொடர்புபட்ட கல்வெட்டுகளும் புராணங்களும் நூல்களும், திருக்கோணேஸ்வரம் சார்ந்த கல்வெட்டுகளும் புராணங்களும் மிக விரிவாக ஆராயப்படவேண்டியவை.

தட்சண் கைலாய புராணம் எனப்படும் கோணாசல புராணம் என்ற நூலைப்பாடிய பண்டித ராசர் என்ற புலவர் பற்றி இன்று பார்ப்போம்; இவர் கோணேஸ்வரர் ஆலய அர்ச்சகராக இருந்தவர். வடமொழியிலும் தமிழிலும் அதிபுலமை வாய்ந்தவர். இவர் யாழ்ப்பாண மன்னன் செகராசசேகரன் காலத்தவராக கருதப்படுகிறார்.

"மணி நிறக்கண்டன் வடபெருங்கயிலையில்
அணி நிறக்கொடுமுடி யாயிரத்தொரு முடி

படவரா வொதுக்கப் பறித்தினி திலங்கை
வட கட நடுவண் மாருதம் பதிப்ப

வரு முக்கோண மலை தென்கயிலைப்
பரமர்க்குருத்திரர் பதினொருபெரும்

ஒருபது முகுந்தரு மொன்பது விரிஞ்சரும்
வருகடற் கமடம் வழங்கிய மீனமும்

தருமலை தழுவிய தெசமுக இருதனும்
பொருமலை மதகரிப்புரவலர் பலரும்

பூசையொ டிறைஞ்சிய புராணனூற்கதையைத்
தேசிகன் சொற்படி தென்கலைப் படுத்தி

யந்தாதித்தொடை யடைவொடு தொடுத்து
நந்தா விருத்த நவையறக் கூறினன்

அந் நாட்டரசனாரியர் கோமான்
பொன்னாட்டைந்தரு பொருவரு காதலன்

மறு நில நிருபரை வானிலத்திருத்தி
யுறு நில முழுவது மொரு தனிபுரப்போன்

தென்னிலங்காபுரித் திசைதொறு மருவும்
மின்னியங்கிய வேல் மேவரலர் புயத்துப்

படவரா முடித்தலைப் பார் முழுதாண்ட
இடபவான் கொடியெழுதிய பெருமான்

சிங்கையாதிபன் சேதுகாவலன்
கங்கை நாயகன் கருங்கடற் சேர்ப்பான்

பவ்வ மேற்றுயில் பராபரன் சூட்டிய
தெஇவ மாமுடிச் செகராசசேகரன்

அவனது காலத் தத்திரி கோணைச்
சிவனது கோயில் சிவமறை முதலோன்

அருமறை யுப நிடத மாகமஞ் சோதிடம்
விரி தமிழ் வரையறைவிளங்கிய குரவோன்

சேயினுந்திறலான் றயானிதி யனையான்
முப்புரி நூற்புயன் முளரியந்தாமன்

செப்பரும் பண்டித ராச சிகாமணி
என்னு நாமத்தெங்குரு பெருமான்
மன்னு நார்கவியும் வல்ல நாவலனே"

எனும் கனவி மூலம் பண்டிதராசர் மன்னன் செகராசசேகரன் காலத்தவர் என்பது தெளிவாகிறது.

இப்போ, கோணாசல புராணத்தில் இருந்து ஒரு கவிதையைக் காண்போம்--------

பூவெலாந்துய்ய வாசம்
புனமெலாமுவர் வாசம்

மாவெலாங் குயிலினோசை
மலையெலாங்குயிலினோசை

காவெலா முயர்ந்ததாழை
கரையெலாங்கமழுந்தாழை

பாவெலா மரனார் த்ஞ்சீர்
பகர் வரி தன்னோர் த்தத்ஞ்சீர்"

திரிகோணமலை தந்த இன்னொரு புலமையை அடுத்த இதழில் காணலாம்.

(தொடரும்)

ஆக்கம்
ஆசிரியர் திரு மாணிக்கம் தவதுரை
Master Knowledge Educational Services

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தமிழ் மக்களுக்கு உதவும் நோக்கோடு 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, ஒரு அங்கீகரிக்கப்பட்ட அறக்கட்டளையாக இங்கிலாந்திலும், வேல்சிலும் பதிவுஎண் 1093924 ன் கீழ்ப்பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

புலம்பெயர் தேசத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் எதிர் நோக்கும் நடைமுறைப் பிரச்சனைகளுக்கு உதவும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அறக்கட்டளையானது, பல்வேறு சேவைகளைச் செய்து வருகின்றது.

வளர்ந்துவரும் இளஞ் சமுதாயத்தின் மத்தியில் எமது தாய்மொழி தமிழைக் கற்பிப்பதும், எமது பாரம்பரிய கலைகளை வளர்ப்பதையும் அனுபவம் மிக்க ஆசிரியர்களால் வார இறுதி நாட்களில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம், வீணை, வயலின், மிருதங்கம், சுரத்தட்டு போன்ற வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. தற்காப்புக் கலையான கராத்தே வகுப்புக்களும், "அபாகஸ்" எனப்படுகின்ற நுண்ணறிவு வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

Keystage, 11+ வகுப்புகளும், யோகா பயிற்சி வகுப்புகளும், டிரம்ஸ்(Drums) வகுப்புகளும் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதோடு, மீண்டும் வழமையாக கொவன்றி நூல்நிலையம் சனிக்கிழமைகளில் பாடசாலைக்கு வருகை தருகிறது. அதுமட்டுமல்லாமல், இளம் கலைமானி மற்றும் முதுகலைமானி போன்ற பட்டப் படிப்புகளை தமிழில் மேற்கொள்வதற்கு தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமாகவும் செயற்பட்டு வருகின்றது.